00168

இலங்கை திறந்த பல்கலைகழகம்
சமூக கற்கைகள் துறை
சமூக விஞ்ஞானத்தில் உயர் சான்றிதழ் கற்கைநெறி
*2024/25 மட்டம் 02: இரண்டாம் பருவம்*
இறுதிப் பரீட்சை
*DSC2714 – சமூகவியல் அடிப்படைகள்*
அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும்.

திகதி - 03 ஆகஸ்ட் 2025 | நேரம் - பி.ப. 1.30 - பி.ப. 4.30

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்

1. சமூகவியலின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்திய முக்கிய சமூக மாற்றங்கள் யாவை?

2. தனிப்பட்ட அனுபவங்களுக்கும் பரந்த சமூக கட்டமைப்புகளுக்கும் இடையிலான தொடர்பைப் புரிந்துகொள்ள சமூகவியல் கற்பனை எவ்வாறு தனிநபர்களுக்கு உதவுகிறது என்பதை விளக்குக.

3. சமூகமயமாக்கல் செயல்முறையை விவரித்து, மனித மற்றும் சமூக வளர்ச்சியில் அதன் முக்கியத்துவத்தை விளக்கவும்.

4. சமூகவியல்சார் ஆராய்ச்சி செயல்பாட்டில் உள்ள முக்கிய படிநிலைகளை பொருத்தமான ஆய்வொன்றை உதாரணமாகக் கொண்டு விளக்குக.

5. சமூகவியலில் அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைகளின் அனுகூலங்கள் மற்றும் மட்டுப்பாடுகளையும் விவாதிக்குக. உங்கள் பதிலை உதாரணங்களுடன் விளக்குக.

6. சமூகவியலில் பின்வரும் கோட்பாட்டு நோக்குகளில் ஒன்றைப் பற்றி விவாதிக்கவும். உங்கள் பதிலில், அதன் முக்கிய கருத்துக்கள், பிரதான சிந்தனையாளர்கள் மற்றும் சமூக நடத்தையை விளக்க அது எவ்வாறு உதவுகிறது என்பதை விவரிக்கவும். பொருத்தமான இடங்களில் உதாரணங்களை பயன்படுத்தவும்.
   *a.* தொழிற்பாட்டுவாத நோக்கு
   *b.* முரண்பாட்டுவாத நோக்கு

7. இனமையவாதம் என்றால் என்ன? அது சமூகத்தில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதனை உதாரணங்களைக் கொண்டு விளக்குக.

8. குற்றம் மற்றும் விலகல் ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை? உதாரணங்களுடன் விளக்குக.

9. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு *(02)* பற்றி சிறு குறிப்புகளை எழுதுக.
   *I.* சமூகக் கட்டமைப்பு
   *II.* பூகோள பண்பாடு
   *III.* பண்பாட்டு சார்புவாதம்
   *IV.* **Emile Durkheim** ன் தற்கொலை பற்றிய ஆய்வு
   *V.* சமூக அடுக்கமைவு

.........முழுப்பதிப்புரிமை உடையது .........